# மே - 03 - புதன்

## திருச்சீடர்கள் தூய பிலிப், தூய யாகப்பர்

## “வழியும் உண்மையும் வாழ்வும் நானே” (யோவா.14:6)

### முதல் வாசகம்: 1 கொரிந்தியர் 15 : 1 – 8

சகோதர சகோதரிகளே, உங்களுக்கு நான் அறிவித்த நற்செய்தியை நினைவுறுத்த விழைகிறேன். அதை நீங்களும் ஏற்றுக் கொண்டீர்கள் அதிலே நிலைத்தும் நிற்கிறீர்கள். நான் உங்களுக்கு அறிவித்த நற்செய்தியை நீங்கள் உறுதியாகப் பற்றிக் கொண்டிருந்தால் அதன் வழியாக மீட்பு அடைவீர்கள் இல்லையேல் நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை பொருளற்றதே. நான் பெற்றுக்கொண்டதும் முதன்மையானது எனக் கருதி உங்களிடம் ஒப்படைத்ததும் இதுவே மறைநூலில் எழுதியுள்ள வாறு கிறிஸ்து நம் பாவங்களுக்காக இறந்து, அடக்கம் செய்யப்பட்டார். மறைநூலில் எழுதியுள்ளவாறே மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்பட்டார். பின்னர் அவர் கேபாவுக்கும் அதன்பின் பன்னிருவருக்கும் தோன்றினார். பின்பு ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட சகோதரர் சகோதரிகளுக்கு ஒரே நேரத்தில் தோன்றினார். அவர்களுள் பலர் இன்னமும் உயிரோடு இருக்கின்றனர் சிலர் இறந்துவிட்டனர். பிறகு யாக்கோபுக்கும் அதன்பின் திருத்தூதர் அனைவருக்கும் தோன்றினார். எல்லாருக்கும் கடைசியில் காலம் தப்பிப் பிறந்த குழந்தை போன்ற எனக்கும் தோன்றினார்.

**பதில்பாடல்:** படைப்புக்களின் அறிக்கை உலகெங்கும் சென்றடைகின்றது

### நற்செய்தி: யோவான் 14 : 6 – 14

அக்காலத்தில் இயேசு தோமாவை நோக்கி, ”வழியும் உண்மையும் வாழ்வும் நானே. என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை. ”நீங்கள் என்னை அறிந்திருந்தால் என் தந்தையையும் அறிந்திருப்பீர்கள். இதுமுதல் நீங்கள் தந்தையை அறிந்திருக்கிறீர்கள். அவரைக் கண்டுமிருக்கிறீர்கள்” என்றார். அப்போது பிலிப்பு, அவரிடம், ”ஆண்டவரே, தந்தையை எங்களுக்குக்காட்டும் அதுவே போதும்” என்றார். இயேசு அவரிடம் கூறியது ”பிலிப்பே, இவ்வளவு காலம் நான் உங்களோடு இருந்தும் நீ என்னை அறிந்துகொள்ளவில்லையா? என்னைக் காண்பது தந்தையைக் காண்பது ஆகும். அப்படியிருக்க, ”தந்தையை எங்களுக்குக் காட்டும்” என்று நீ எப்படிக் கேட்கலாம்? நான் தந்தையினுள்ளும் தந்தை என்னுள்ளும் இருப்பதை நீ நம்புவதில்லையா? நான் உங்களுக்குக் கூறியவற்றை நானாகக் கூறவில்லை. என்னுள் இருந்துகொண்டு செயலாற்றுபவர் தந்தையே. நான் தந்தையுள் இருக்கிறேன் தந்தை என்னுள் இருக்கிறார். நான் சொல்வதை நம்புங்கள் என் வார்த்தையின் பொருட்டு நம்பாவிட்டால் என் செயல்களின் பொருட்டாவது நம்புங்கள். நான் செய்யும் செயல்களை என்னிடம் நம்பிக்கை கொள்பவரும் செய்வார் ஏன், அவற்றைவிடப் பெரியவற்றையும் செய்வார். ஏனெனில் நான் தந்தையிடம் போகிறேன் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் என் பெயரால் கேட்பதையெல்லாம் நான் செய்வேன். இவ்வாறு தந்தை மகன் வழியாய் மாட்சி பெறுவார். நீங்கள் என் பெயரால் எதை கேட்டாலும் செய்வேன்” என்றார்.

**தியானம்:** பாவத்தால் கடவுளின் மாட்சியை இழந்து போன மனித குலத்தை மீட்பதற்காக கடவுள் தன்னுடைய ஒரே மகனை இந்த உலகிற்கு அனுப்பத் திருவுளம் கொண்டார். தனது அன்பால் தனது சாயலும் உருவமும் கொடுத்து உருவாக்கிய மனிதன் (தொ.நூ.1:27) தன்னுடைய அன்பை விட்டு பிரிந்து சென்றாலும் தான் ஒருபோதும் அவனைவிட்டு பிரியாமல் அவன் இழந்து போனதைத் திரும்பவும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு தன்னுடைய ஒரே மகனை இந்த உலகிற்கு அனுப்பினார். “நாம் வாழ்வு பெறும் பொருட்டு கடவுள் தம் ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார். இதனால் கடவுள் நம்மீது வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் கடவுள் மீது அன்பு கொண்டுள்ளோம் என்பதில் அல்ல மாறாக அவர் நம்மீது அன்பு கொண்டு தம் ஒரே மகனை நம் பாவங்களுக்குக் கழுவாயாக அனுப்பினார் என்பதில்தான் அன்பின் தன்மை விளங்குகின்றது” (1யோவா.4:9-10). தந்தையின் ஒப்பற்ற அன்பை, மன்னிப்பை, விடுதலையை வெளிக்காட்டுவதற்கே இயேசு இந்த உலகிற்கு வந்தார். எனவே தான் தி.ப.10:38ல் நாம் வாசிக்கின்றோம் “கடவுள் நாசரேத்து இயேசுவின்மேல் தூய ஆவியாரின் வல்லமையைப் பொழிந்தருளினார். கடவுள் அவரோடு இருந்ததால் அலகையின் கொடுமைக்கு உட்பட்டிருந்த அனைவரையும் அவர் விடுவித்து எங்கும் நன்மை செய்து கொண்டே சென்றார்” என்று. கடவுளின் அன்பை, இரக்கத்தை, மன்னிப்பை இந்த உலகத்திற்கு தன்னுடைய வாழ்க்கையால் வாழ்ந்து காட்டிய இயேசு இன்றும் தன்னுடைய உயிர்ப்பால் நம்மோடு உடன் வாழுகின்றார். “மனிதர் என்னும் முறையில் தாவீதின் வழிமரபினர். தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட நிலையில் வல்லமையுள்ள இறைமகன். இவர் இறந்து உயிர்த்தெழுந்ததால் இந்த உண்மை நிலைநாட்டப்பட்டது. நன்மைத்தனங்களுக்கெல்லாம் ஊற்றாகிய இயேசுவை நாம் உறுதியாக பற்றிக்கொண்டு வாழ்வுக்கு அழைத்துச் செல்லும் புதிய வழியை தன்னுடைய தூய இரத்தத்தால் திறந்து வைத்த அவரது வழியைப் பின்பற்றி தீய மனச்சான்றிலிருந்து விடுவிக்கப்பட்ட உள்ளமும் தூய நீரில் கழுவப்பட்ட உடலும் உடையவர்களாய், நேரிய உள்ளத்தோடும் மிக உறுதியான நம்பிக்கையோடு இயேசுவைப் பின்பற்றுவோம் (எபி.10:22). இந்த இயேசுவாலேயன்றி வேறு எவராலும் மீட்பு இல்லை. ஏனென்றால் நாம் மீட்பு பெறுமாறு வானத்தின் கீழ், மனிதரிடையே இவரது பெயரேயன்றி எந்தப் பெயரும் கொடுக்கப்படவில்லை. (தி.ப.4:12) என்பதை உணர்ந்து இயேசுவின் பெயரை நாள்தோறும் உச்சரித்து அவர் காட்டிய வழியில் அவர் போதித்த உண்மையில் நாம் நமது வாழ்வின் உயிர்ப்பைக் கண்டுகொண்டு தந்தையின் மாட்சியில் பங்குபெறுவோம்.